சார்பு நீதிமன்றம், மேலூர்

MCOP No. 8/2024

பெயர் : பன்னீர்செல்வம்(RW2)

தகப்பனார் பெயர் :வேலுச்சாமி

கணவர் பெயர் :

வயது :44

கிராமம் :மதுரை

வட்டம் :மதுரை

தொழில் :முதுநிலை உதவியாளர், The New India Assurance

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

07.02.2026

எ.ம.சா.2முதல் விசாரணை:

நான் இந்த மனுவில் எதிர்மனுதாரர் தரப்பு 2வது சாட்சி. என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். நான் தற்போது எனது அங்கீகார கடிதத்தை தாக்கல் செய்கிறேன் மேற்படி ஆவணம் எ.ம.சா.ஆ1 ஆக குறியீட செய்யப்படுகிறது. இந்த வழக்கு தொடர்புடைய வாகனமாக Royal Enfield classic இருசக்கர வாகனம் பதிவு எண் குறிப்பிடப்படவில்லை Chasis No.ME3U3S5F2LH924158/ Engine No.U3S5F1LG553021 வாகனத்தின் காப்பீட்டு நகலை தாக்கல் செய்கிறேன். அதன்படி அமேற்படி வாகனத்தின் காப்பீடானது 24.08.2020 முதல் 23.08.2021 வரை வாகனத்தினுடைய சேதம் மற்றும் எதிர்வரும் வாகனத்தினுடைய சேதத்தையும் கட்டுப்படுத்தியும் 24.08.2020 முதல் 23.08.2025 முடிய 3ம் தரப்பினர் சேதத்தை

கட்டுப்படுத்தியும், வழங்கப்பட்டிருக்கிறது. மேற்படி ஆவணம் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.02.07 20:13:52 +0530

Sub Judge
Melur